இந்தியத் துணைத் தூதரகம்

யாழ்ப்பாணம்

ஊடக அறிக்கை

இந்தியாவின் தேசியக் கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 139வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்.

இந்தியாவின் தேசியக் கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 139வது பிறந்த நாள் நினைவுநிகழ்வு இன்று காலை (டிசம்பர் 11, 2021) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணம், நல்லூர் அரசடிச் சந்தியில் அமைந்துள்ள மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் அவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து வடமாகாண சபையின் அவைத்தலைவர் திரு. சி.வி.கே. சிவஞானம் மற்றும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு வி.மணிவண்ணன் மற்றும் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் ஆகியோர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

2. இந் நிகழ்வைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் இடம்பெற்ற பிறிதொரு நிகழ்வில் கலந்து கொண்ட இந்தியத் துணைத் தூதுவர் அவர்கள் அங்கு புதிதாக அமைக்கப்பட்டிருந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் திருவுருவச்சிலையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

3. நிகழ்வுகளின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்

டிசம்பர் 11, 2021